## <u>அவசரக் கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2026-ம் ஆண்டு ஸ்ரீபராபவ வருடம் ஜுலை மாதம் **09.07.2026-ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு** நகர்மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண். 89 / 2026</u>**

ஆணையர் அவர்களின் பிப்ரவரி 2026 முதல் ஜுன் 2026 வரையான மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 2589 / 2023 / சி1)**

**தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 90 / 2026</u>**

நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2026 முதல் ஜுன் 2026 வரையான மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 2589 / 2023 / சி1)**

**தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 91 / 2026</u>**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண். 015 / 2026 / அ2, நாள். 07.05.2026-ல் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2026-2027-ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா தொகை ரூ. 75,000/-ம் செலுத்தத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி சந்தாத் தொகையை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தியதை மன்றத்தின் அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 772 / 2026 / சி1)**

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 92 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் பொதுப்பிரிவு, கணக்கர் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் கணிணி பிரிவில் உள்ள கணினி, பிரிண்டர், ஜெராக்ஸ் மிஷின் ஆகியவைகளுக்கு டோனர் கேட்ரேஜ்கள் 2026-2027-ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்க்கு மன்ற அனுமதி கோரியும், மேற்படி அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு அச்சகத்திலிருந்து கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தேவைக்கேற்ப அவ்வப்பொழுது விநியோக உத்தரவு வழங்கி பெற்றுக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். **762 / 2026 / அ2**)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண்.93 / 2026**

2026-2027-ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கம்ப்யூட்டர் பிரிண்டிங் பேப்பர் ஆகியவைகள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்க்கு மன்ற அனுமதி கோரியும், மேற்படி அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு அச்சகத்திலிருந்து கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தேவைக்கேற்ப அவ்வப்பொழுது விநியோக உத்தரவு வழங்கி பெற்றுக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.763 / 2026 / அ2)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண்.94 / 2026**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள் நடைபெற்றதால், வாரச்சந்தையானது ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில், வாரச்சந்தை சுங்க வசூல் செய்ய நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த திரு.ஜி.கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்றத்தால் ஏற்கப்பட்டு குத்தகை உரிமம் வழங்கப்பட்டதை ஆட்சேபனை தெரிவித்து சென்னை உயர்நீதி மன்றத்தில், தலைவர், திருப்பூர் தியாகி குமரன் வாரச்சந்தை நலச்சங்கம் சார்பாக வழக்கு (எண்.W.P.No.18441/2024) தொடரப்பட்டு நடைமுறையில் இருந்தது.

இந்நிலையில் மேற்படி வழக்கானது கடந்த 02.04.2026 அன்று மாண்பமை நீதிபதி திரு.கிருஷ்ணன் ராமசாமி அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எதிர்மனுதாரரின் மனு நிராகரிக்கப்பட்டு, வழக்கு முடிவுற்றுள்ளது. மேற்படி தேதியில் நகராட்சியின் சார்பாக வாதிட்ட திரு.வி.வேலுச்சாமி, அரசு கூடுதல் வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.30,000/- வழங்கக் கோரப்பட்டுள்ளார். மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/-ஐ திரு.வி.வேலுச்சாமி, அரசு கூடுதல் வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

ரூ.15,000/- மட்டும் வழக்கறிஞர் கட்டணமாக அரசு கூடுதல் வழக்கறிஞருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1385/2024/அ3)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண்.95 / 2026**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி, சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதத்திற்கான டோக்கன்களின் இருப்பு குறைவாக உள்ளதால் நவம்பர்-2026 வரையான மாதங்களுக்கு தேவையான கீழ்க்காணும் எண்கள் உடைய டோக்கன்களை The Coimbatore District Printers Service Industrial Co-op Soc ltd கூட்டுறவு அச்சகத்தில் வாங்குவதற்காக தோராய செலவினத் தொகை ரூ.3.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | டோக்கன்கள் | தொடக்கம் | முடிவு | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | இட்லி டோக்கன்கள் | 390001 | 580000 | 190000 |
| 2 | சாம்பார் டோக்கன்கள் | 65001 | 100000 | 35000 |

| வ.எண் | டோக்கன்கள் | தொடக்கம் | முடிவு | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 3 | தயிர் டோக்கன்கள் | 65001 | 100000 | 35000 |
| | | | **மொத்தம்** | **260000** |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.515/2026/அ3)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 96 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண்.1 மற்றும் 2-க்கான மூன்றாண்டு குத்தகை காலம் முடிவுறுவதாலும், வரிசை எண்.3-ல் குறிப்பிட்டுள்ள பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் குத்தகை எடுத்த குத்தகைதாரர் இரண்டாம் ஆண்டு குத்தகை காலம் முடிவடைவதுடன் மூன்றாம் ஆண்டு குத்தகையை தொடர விருப்பம் இல்லை என தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே, கீழ்க்கண்டவாறு குத்தகை இனங்களுக்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி ஏலம் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை விபரம் | குத்தகை முடிவுறும் காலம் |
|---|---|---|
| 1. | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | 30.09.2026 (மூன்றாம் ஆண்டு குத்தகை காலம் முடிவுறும் தேதி) |
| 2. | ஆடுவதைச் சாலையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 31.12.2026 (மூன்றாம் ஆண்டு குத்தகை காலம் முடிவுறும் தேதி) |
| 3. | பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | 30.11.2026 (இரண்டாம் ஆண்டு குத்தகை காலம் முடிவுறும் தேதி) |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.877/2026/அ3)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 97 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான கடை குத்தகை இனங்களில் வாரச்சந்தை உட்புற கடை எண்.12-ன் குத்தகைதாரர் முதல் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவடைவதுடன் இரண்டாம் மூன்றாண்டு கடைக்குத்தகையை தொடர விருப்பம் இல்லை எனத் தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார். எனவே, வாரச்சந்தை உட்புற கடை எண்.12க்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி ஏலம் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை விபரம் | குத்தகை முடிவுறும் காலம் |
|---|---|---|
| 1. | வாரச்சந்தை உட்புற கடை எண்.12 | 31.07.2026 (முதல் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவுறும் தேதி) |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.734/2026/அ3)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 98 / 2026</u>**

இந்நகராட்சியில் 2017-2018 முதல் 2022 – 2023-ம் ஆண்டு வரை செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு செலுத்தப்பட்ட டேவணித்தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்டுள்ள டெபாசிட் தொகை ரூ.5, 07,280/- வழங்குமாறு துரை அன் கோ ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். இத்தொகை காலங்கடந்த வைப்புத் நிதி கணக்கில் பின்வருமாறு உள்ளது.

| வ. எண் | வருடம் | தொகை |
|---|---|---|
| 1 | 2017 - 2018 | 11900 |
| 2 | 2018 - 2019 | 272480 |
| 3 | 2019 - 2020 | 222900 |
| | **மொத்தம்** | **507280** |

எனவே மேற்கண்ட தொகை ரூ. 5,07,280/-ஐ ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 0346 / 2026 / அ1)**

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 99 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 2026-2027-ம் நிதியாண்டிற்கான சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி ஆகிய இனங்களுக்கான கேட்பு அறிவிப்புகள் அச்சு செய்து வழங்கவும். அதற்கான தோராய செலவினமாக ரூ.50,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.761/2026/அ3)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 100 / 2026</u>**

திரு. கே. எம். சிவசாமி த/பெ. முத்துசாமி, 3/102. பெரிய தோட்டம், லக்கமநாயக்கன்பட்டி, திருப்பூர் மாவட்டம் என்பவர் JSW RENEW ENERGY DOLVI Three LIMITED, Mumbai-ன் காற்றாலை மின்உற்பத்தி நிலையத்திற்கு மின்கம்பம் மற்றும் மின்கம்பிகள் நிறுவ மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களின் அனுமதி கடிதம் ந.க.எண். 25632 / 2025 / இ5, நாள். 02.01.2026-ஐ எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்கு எண். W.P.No. 19495/2026-ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களை முதல் பிரதி வாதியாகவும், காவல் துறை கண்காணிப்பாளர், திருப்பூர் அவர்களை இரண்டாம் பிரதி வாதியாகவும், வருவாய் கோட்டாட்சியர், தாராபுரம் அவர்களை மூன்றாம் பிரதி வாதியாகவும், ஆணையாளர், வெள்ளகோவில் நகராட்சி அவர்களை நான்காம் பிரதி வாதியாகவும் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், வெள்ளகோவில் அவர்களை ஐந்தாம் பிரதி வாதியாகவும் சேர்த்து JSW RENEW ENERGY DOLVI Three LIMITED, Mumbai நிறுவனத்திற்கு எதிராக பொதுநல வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி பொதுநல வழக்கை நடத்துவதற்கு அரசு வழக்கறிஞர் கட்டணம் வழங்க ரூ.25000/- வழங்க கோரப்பட்டுள்ளார். மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.25000/-ஐ திரு. P. பாலதண்டாயுதம், அரசு கூடுதல் வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

ரூ.15000/- மட்டும் வழக்கறிஞர் கட்டணமாக அரசு கூடுதல் வழக்கறிஞருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 849/2026/எப்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.101 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரீ.சர்வே.எண்.740/2A2-ல் 2.00 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு.K. தட்சிணாமூர்த்தி, கதவுஎண்.12/61, மூத்தநாயக்கன்வலசு, வேலப்பநாயக்கன்வலசு அஞ்சல், சேனாபதிபாளையம் அவர்களால் மனைப்பிரிவு அனுமதி கோரியது. திருப்பூர் மாவட்டம் நகர்ஊரமைப்பு உதவிஇயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.ODHMUGJ7/2026/ TCP, நாள்.06.03.2026-ன்படி உள்ளாட்சிக்கு மனைப்பிரிவு உரிமையாளரால் சாலை மற்றும் பொது இடங்களை நன்கொடை ஆவணம் எண்.791/2026 நாள்.26.02.2026-ல் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர் காங்கேயம் அவர்களின் டி.ஆர்.எண்.2026/32/05/002157SD, நாள்.10.06.2026–ல் சாலை மற்றும் பொது இடங்களுக்கு தனி உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தெருவிளக்கு அமைப்பதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.210000/-ஐ சலான் எண்.159/01/03/26-27/0002899, நாள்.08.06.2026-ல் நகராட்சியில் செலுத்தியுள்ளார். ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி வாயிலாக மனைப்பிரிவு சாலைகளை ஆய்வு செய்து 09.06.2026-ல் தரசான்று வழங்கியுள்ளார்கள். மேலும் இம்மனைப்பிரிவிற்கு வடிகால் மற்றும் குடிநீர் வசதிகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் 09.06.2026-ல் சான்று வழங்கியுள்ளார். நிலப்பயன்பாடு மாற்றக் கட்டணம் ரூ.47000/-ஐ பாரத மாநில வங்கியில் கருவூல சலான்எண்.20260704013486, நாள். 04.07.2026–ல் கட்டியுள்ளார். இவ்வலுவலக கேட்பு அறிவிப்புஎண்.LA/159/2026/014/000010, நாள்.03.07.2026-ன்படி மனைப்பிரிவு கட்டணங்கள் ரூ.298564/-ஐ சலான் எண்.159/CP/26-27/0000343, நாள்.04.07.2026–ல் நகராட்சி கணக்கில் இணைய வழியில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களால் SWP/DTCP/TIRUPPUR/ LAYOUT/APPROVAL NO: 44/2026-ல் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

நகர் ஊரமைப்பு இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம்ந.க.எண்.ODHMUGJ7/2026/TCPநாள்.06.03.2026-ல் குறிப்பிட்ட சிறப்பு நிபந்தனைகள் மனைப்பிரிவு உரிமையாளரால் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

(இணையவழிபதிவுஎண். 159/CP/25-26/0001281)

**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.102 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரீ.சர்வே.எண்.588/1A –ல் 2.19 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு.நகுல்சாமி மற்றும் 8 நபர்கள், கதவுஎண்.6, பசுபதிபுரம், கரூர் அவர்களால் மனைப்பிரிவு அனுமதி கோரியது. திருப்பூர் மாவட்டம் நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.YILVQTEI/2025/TCPநாள்.30.05.2025-ன்படி உள்ளாட்சிக்கு மனைப்பிரிவு உரிமையாளரால் சாலை மற்றும் பொது இடங்களை நன்கொடை ஆவணம்எண்.1707/2025 நாள்.25.04.2025-ல் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர் காங்கேயம் அவர்களின் டி.ஆர். எண்.2025/32/05/001636SD, நாள்.28.06.2025–ல் சாலை மற்றும் பொது இடங்களுக்கு தனிஉட்பிரிவு செய்யப்பட்டு

பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி வாயிலாக மனைப்பிரிவு சாலைகளை ஆய்வு செய்து 07.11.2025-ல் தர சான்று வழங்கியுள்ளார்கள். மேலும் இம்மனைப்பிரிவிற்கு வடிகால் மற்றும் குடிநீர் வசதிகள் நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் 26.11.2025-ல் சான்று வழங்கியுள்ளார். அத்துடன் தெருவிளக்கு அமைப்பதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.286000/-ஐ சலான்எண்.159/01/03/25-26/0009611, நாள்.08.11.2025-ல் நகராட்சியில் செலுத்தியுள்ளார். நிலப்பயன்பாடு மாற்றக் கட்டணம் ரூ.893400/-ஐ பாரத மாநில வங்கியில் கருவூல சலான்எண்.20260616011578 ,நாள். 16.06.2026-ல் கட்டியுள்ளார். இவ்வலுவலக கேட்பு அறிவிப்புஎண்.LA/159/2025/014/00006, நாள்.16.12.2025-ன்படி மனைப்பிரிவு கட்டணங்கள் ரூ.411503/-ஐ சலான்எண்.159/CP/26-27/0000314, நாள்.23.06.2026-ல் நகராட்சி கணக்கில் இணைய வழியில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களால் SWP/DTCP/TIRUPPUR/ LAYOUT/APPROVAL NO: 99/2025-ல் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

நகர்ஊரமைப்பு இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.YILVQTEI/2025/TCPநாள்.30.05.2025-ல் குறிப்பிட்ட சிறப்புநிபந்தனைகள் மனைப்பிரிவு உரிமையாளரால் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

(இணையவழிபதிவுஎண். 159/CP/25-26/0000347)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 103 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வார்டு எண் 01 முதல் 21 முடிய உள்ள பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாகவும், நகரத்தின் தூய்மை குறித்து மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Garbage Free City 3 Star Rating) பெறுவதற்கும், தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இப்பொருள் குறித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், வார்டுகளில் உள்ள பொது கழிப்பிடங்களை பொதுமக்கள் முறையாக பயன்படுத்துவது குறித்தும், திறந்த வெளியில் குப்பைகளை கொட்டுவது தவிர்த்தல் குறித்தும், வீடுகள் தோறும் மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வழங்குவது குறித்தும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பேரணி நடத்துதல், தெருநாடகம் நடத்துதல், விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சடித்தல், மற்றும் இதர விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்துதல் குறித்து மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 2148 / 2024 / எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 104 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பயன்பாட்டில் உள்ள இலகுரக வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் ஆகியவற்றிக்கு வாகன காப்பீடு இன்சூரன்ஸ் 10.06.2026-ந் தேதியுடன் முடிவடையவுள்ளதால் மேற்கண்ட வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் தொகையை M/S. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தில் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை

மேற்கொள்ள வேண்யுள்ளதால் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும்.

**அலுவலக குறிப்பு**

1. திடக்கழிவு மேலாண்மை பணி தனியார் நிறுவன ஒப்பந்ததாரர் M/S. S.R Enterprises எனும் நிறுவனத்தினருக்கு 30.06.2026-ந் தேதியுடன் பணிக்காலம் முடிவு பெற உள்ளதால் நகர்மன்ற ஒப்புதல் பெற்று வாகன காப்பீடு நகராட்சியின் மூலம் தற்போது செலுத்தலாம்.
2. மேற்படி ஒப்பந்த நிறுவனத்தினர் 30.06.2026-ந் தேதிக்கு பின்னர் மீள நீட்டிப்பு ஏதும் நகராட்சியின் மூலம் வழங்கினால் மேற்படி வாகன காப்பீடு தொகையை ஒப்பந்ததாரரிடம் இருந்து பிடித்தம் செய்திட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் நகர்மன்ற ஒப்புதல் வழங்கலாம்.

**(கோப்புஎண். 872/2026/எச்1)**

**தீர்மானம் – ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 105 / 2026**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 முடிய உள்ள பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நகர்மன்ற தீர்மான எண். 718 / 2025 நாள்.08.09.2025 -ன் படி தற்காலிகமாக நியமித்து பணிமேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆங்காங்கே டெங்கு காய்ச்சல் பரவி வருவதாலும் காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கும் ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.836/2025 நாள்.26.12.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கொசுப்புழு ஒழிப்பு ஒப்பந்த பணியாளர்கள் (DBC) ஏப்ரல் 2026 முதல் ஜுன் 2026 மாதம் முடிய மூன்று மாதங்களுக்கு பணி நீடிப்பு செய்து, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது, புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதால், மேலும் இரண்டு மாதத்திற்கு 01.07.2026 முதல் 31.08.2026 முடிய ஒப்பந்த பணி நீட்டிப்பு செய்திடவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்புஎண். 1168/2025/எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 106 / 2026**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளிகள், நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி ஆக மொத்தம் 18 எண்ணிக்கையில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பள்ளிகளுக்கு அடிப்படை வசதியான தூய்மைப்பணி, கழிப்பிடம் சுத்தம் செய்தல், பள்ளி வளாகத்தை சுத்தம் செய்தல், கிருமி நாசினிகள் தெளித்தல் போன்ற சுகாதார பணிகள் நகராட்சி மூலம் ஒப்பந்த அடிப்படை தூய்மை பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.555/2025 நாள்.28.03.2025-ன் படி தீர்மானிக்கப்பட்டு பள்ளி சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பள்ளியில் படிக்கும் மாணவ – மாணவியர்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தீர்மான எண்.782/2025, நாள்.11.11.2025-ல் 30.06.2026-ந் தேதி முடிய மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து தூய்மை பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தற்போது புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதால், மேலும் இரண்டு மாதத்திற்கு 01.07.2026 முதல் 31.08.2026 முடிய ஒப்பந்த பணி நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்புஎண். 053/2024/எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 107 / 2026**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 முடிய வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரித்து இறுதியாக்கம் செய்து ஒப்படைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.33552/2022/EA2-SWM-11, நாள்.10.01.2023-ன் படி திருவாளர். எஸ்.ஆர். என்டர்பிரைசஸ், திருச்சி எனும் நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்த புள்ளி கொடுத்து 01.05.2023 முதல் 30.04.2026-ந் தேதியுடன் மூன்றாண்டு பணி முடிவுற்றது.

இச்சூழ்நிலையில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தேர்தல் நன்நடத்தை விதி முறைகள் அமலில் இருந்ததால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித efile.No. DMA /1196/2026 - SBM2, நாள். 15.03.2026-ன் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு பொதுசுகாதார பணி பாதிப்பு ஏற்படாத வகையில் 01.05.2026 முதல் 30.06.2026 முடிய மேலும் இரண்டு மாதங்களுக்கு ஒப்பந்த தூய்மை பணிக்கு ஏற்கனவே, ஒப்பந்த பணி மேற்கொண்டு வரும் திருவாளர். எஸ்.ஆர். என்டர்பிரைசஸ், திருச்சி எனும் நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கி தூய்மை பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி நிறுவனத்தின் மீது கீழ்கண்ட குறைபாடுகள் தொடர்ந்து வரப் பெற்றது.

1. ஒப்பந்த பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய EPF & ESI தொகையை முறையாக செலுத்தப்படவில்லை.
2. ஒப்பந்த பணியில் ஈடுபடும் 85 பணியாளர்களுக்கு குறைவாகவே EPF & ESI தொகையை செலுத்தப்பட்டுள்ளது.
3. பொது சுகாதார பிரிவில் இருந்து ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பேட்டரி வாகனங்கள், இலகுரக வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை முறையாக பழுது நீக்கம் செய்யப்படவில்லை.
4. இதனால் பொது சுகாதார பணி பாதிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டு நகராட்சியின் மூலம் பழுது நீக்கம் செய்து அதற்குரிய தொகையை மாதந்திர ஊதிய பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.
5. ஒப்பந்த பணியாளர்கள் தினசரி பணிக்கு வர இயலாத போது பதிலி பணியாளர்கள் தயாராக வைத்து பணிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆகிய மேற்கண்ட குறைபாடுகளை களைந்து அறிக்கை சமர்ப்பிக்க கோரி பல முறை அறிவிப்பு வழங்கியும், இது நாள் வரை எவ்வித பதில் அறிக்கையும் மேற்படி நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை.

இந்நிலையில் M/S S.R Enterprises எனும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்திரவு காலம் 30.06.2026 -ந் தேதியுடன் முடிவடைவதால் தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் efile No. DMA / 1196 / 2026-SBM-2 Date.02.06.2026 ன்படி மேலும் 2 மாதத்திற்கு 01.07.2026 முதல் 31.08.2026 முடிய ஒப்பந்த நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு இரண்டு மாதங்களுக்கு பணி நீட்டிப்பு வழங்குவது அல்லது ஒப்பந்த பணி ரத்து செய்து சுய உதவி குழு மூலம் பணி மேற்கொள்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மேற்கண்ட பொருள் குறித்து மன்றம் முடிவு செய்து அனுமதிக்கலாம்.

**(கோப்புஎண். 1334/2021/எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.108 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி ஆகியவை மொத்தம் - 20 எண்ணிக்கையில் உள்ளன. இதில் துவக்கப்பள்ளி-10 எண்ணிக்கைகள், நடுநிலைப்பள்ளி-7 எண்ணிக்கைகள் மற்றும் அரசு உயர் நிலைப்பள்ளி-3 எண்ணிக்கையில் அடிப்படை வசதிகளான தூய்மைப்பணி, கழிப்பிடம் சுத்தம் செய்தல், பள்ளி வளாகத்தை சுத்தம் செய்தல், கிருமி நாசினிகள் தெளித்தல் போன்ற சுகாதார பணிகள் நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது,

மேற்கண்ட பணிகளை மாணவ மாணவிகளின் பொது சுகாதார அத்தியாவசியம் கருதி மேற்கொள்ள வேண்டியுள்ளதால், ஏற்கனவே அரசாணை எண். 166, நாள்.22.11.2016-ன் படியும், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றிய குழு தீர்மான எண்.25, நாள்.11.01.2023-ன் படி, நகராட்சி வசம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் பள்ளிகளை ஒப்படைக்க தீர்மான நிறைவேற்றப்பட்டது. வெள்ளகோவில் நகர்மன்ற தீர்மான எண்.373/2023, நாள்.31.03.2023ன்படி இதனை ஏற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளுக்கு தூய்மை பணியாளர்கள் தற்காலிகமாக திருவாளர் துரை & கோ எனும் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் 30.06.2026 –ந்தேதியுடன் முடிவடைகிறது.

எனவே, மேற்கண்ட பள்ளிகளுக்கு புதியதாக திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரி தூய்மை பணிகளுக்கு தேவையான 20 பணியாளர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளர் பணிக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி ரூ.646 (EPF, ESI) மற்றும் இதர பிடித்தம் உட்பட நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். / 2026 / எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.109 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் மூலம் நகராட்சிகளில் உள்ள வார்டு எண் 01 முதல் 21 முடிய உள்ள பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சிதலைவர், திருப்பூர் மற்றும் துணை இயக்குநர் சுகாதார பணிகள், திருப்பூர் அவர்களது ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க DBC பணியாளர்களை கொண்டு வீடு வீடாக சோதனை செய்து கொசுப்புழு உற்பத்தியை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் கொசுக்கள் மூலம் பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல், சிக்குன் குனியா மற்றும் இதர காய்ச்சலிருந்து தடுக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண். 14019/அ5/2021 நாள், 05.06.2026-ன் கடிதத்தின் தெரிவித்துள்ளவாறு டெங்கு காய்ச்சல் குறித்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நல்ல தண்ணீரில் அதிக அளவில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்கவும் ஆட்டுக்கல், தேங்காய் சிரட்டைகள், சின்டெக்ஸ் டேங்க், சிமெண்ட் தொட்டிகள், டயர்கள் மற்றும் இதர இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை கண்டறிந்து அதில் உள்ள அபேட் மருந்து தெளித்தல், பிளிச்சீங் பவுடர் தூவுதல் போன்ற பணி மேற்கொள்ள இந்நகராட்சியில் மொத்தம் 16657 குடியிருப்புகள் உள்ளது.

இந்த குடியிருப்புகள் அனைத்திலும் கள ஆய்வு மேற்கொள்ள தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி 40 எண்ணிக்கையில் இரண்டு மாதங்களுக்கு

திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி ரூ.646 (EPF,ESI) மற்றும் இதர பிடித்தம் உட்பட நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்புஎண். / 2026 / எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 110 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 முடிய உள்ள பகுதிகளில் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது இடங்கள் (Reserve Site), சாலையோரங்கள், பள்ளி வளாகங்கள், அரசு அலுவலக காலி இடங்கள், நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மையப் பகுதிகளில் (Centre Medium) உள்ள இடங்கள், குளங்கள், மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் அமைந்துள்ள வளாகங்கள், வாரசந்தைப் பகுதி, பேருந்து நிலையம் மற்றும் இதர இடங்களில் புதியதாக மரக்கன்றுகள் நட்டு சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும், வெள்ளகோவில் நகரை அழகாக சீர்படுத்தும் வகையிலும், பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளுக்கு தேவையான மரக்கன்றுகள், பூஞ்செடிகள், செடிகளுக்கு தேவையான பாதுகாப்பு வலையங்கள் மற்றும் தண்ணீர் வசதிகள் செய்து இந்நகராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

வெள்ளகோவில் நகரை அழகாக சீர்படுத்தும் வகையிலும், சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும் இப்பணியினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். சமூக பங்களிப்பு நிதி ஏதும் பெறப்பட்டால் பொது நிதியில் ஈடு செய்திடலாம்.

**(கோப்புஎண். /2026/எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 111 / 2026</u>**

பருவ மழை தொடங்க உள்ளதை முன்னிட்டு வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 21 முடிய உள்ள பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ள இடங்கள், குப்பைகள் அகற்றப்படும் இடங்கள், பேருந்து நிலையம், வாரச்சந்தை பகுதி, வடிகால் சுத்தம் செய்யப்படும் இடங்கள், குப்பைகள் அகற்றப்படும் இடங்கள், பேருந்து நிலையம், வாரச்சந்தை பகுதி, வடிகால் சுத்தம் செய்யப்படும் இடங்கள் உரக்கிடங்கு பகுதிகள், பொது கழிப்பிடங்கள், 17 நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் சிறுநீர் பிறைகள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு கலந்து தூவி கிருமி நீக்கம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, மேற்கண்ட பொதுசுகாதார பணிகளுக்கு 2026-2027-ம் ஆண்டிற்கு தேவையான கிருமி நாசினி மருந்துகளான பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள், வாசனை பினாயில், கிளீனிங் ஆசிட், டாய்லெட் மாப்பு, டாய்லெட் பிரஷ், டாய்லெட் ரப்பர் பிரஷ், கையுறை, முகவுறை, லைசால் மற்றும் இதர கிருமி நாசினிகள் தேவையான அளவு வாங்கி பயன்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் | அளவு |
|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுட்ர் | 7 TON |
| 2 | சுண்ணாம்பு தூள் | 7 TON |

| | | |
|---|---|---|
| 3 | வாசனை பிளாயில் | 500 Lit |
| 4 | கிளீனிங் ஆசிட் | 300 Lit |
| 5 | டாய்லெட் மாப்பு | 150 Nos |
| 6 | டாய்லெட் பிரஷ் | 150 Nos |
| 7 | டாய்லெட் ரப்பர் பிரஷ் | 150 Nos |
| 8 | கையுறை | 500 Box |
| 9 | முகவுறை | 5000 Nos |
| 10 | லைசால் | 500 Lit |

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி, மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.1359/2026/எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 112/ 2026**

வெள்ளகோவில் நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் தெற்கு மற்றும் கிழக்கு பகுதியில் பின்புறம் பேவர் பிளாக் கற்கள் பதிக்க **பொதுநிதி** 2026-27**ன்** கீழ் மேற்கொள்ள ரூ.4.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.0886/2026/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 113 / 2026**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.01, 02, 03, 04, 11 ஆகிய வார்டுகளில் தினசரி உருவாகும் மக்கும் குப்பைகளை உரமாக்க அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரமையத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள சில பழுது பணிக்கு **பொதுநிதி** 2026-27**ன்** கீழ் மேற்கொள்ள ரூ.1.25 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.0885/2026/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 114 / 2026**

வெள்ளகோவில் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் கோப்புகள் வைப்பறை, வரி செலுத்துமிடம் ஆகிய அறைகளுக்கு கோப்புகள் மற்றும் Challan-கள் வைப்பதற்கு Rack-கள் மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும் பிளாஸ்டிக் சேர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் அறையினை Partition பணி மேற்கொள்ளவும் டேபிள்கள் Rolling Chair-கள் வாங்குவதற்கும் போன்ற அலுவலக தேவைகளுக்கு **பொதுநிதி** 2026-27**ன்** கீழ் மேற்கொள்ள ரூ.3.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.0884/2026/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 115 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் வரி செலுத்துமிடத்தில் வெயில் மற்றும் மழைகாலங்களில் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் இருப்பதற்காக மேற்கூரை அமைக்கவும், அலுவலக வளாகத்தின் பின்புறம் Gate அமைக்கவும், அனைத்து பிரிவு ஜன்னலிலும் திரைகள் அமைக்கவும் வளாக முகப்பில் புல்தரைகள், செடிகள் மற்றும் அதனைச் சுற்றி வேலி அமைக்கவும், பழைய அலுவலகத்தில் உள்ள AC-களை கழற்றி புதிய அலுவலகத்தில் பொருத்தவும் மற்றும் இதர பணிக்கு **பொதுநிதி 2026-27-ன்** கீழ் மேற்கொள்ள ரூ.8.10 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.0883/2026/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 116 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள அம்மா உணவகம் 10 வருடங்களுக்க மேல் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி அம்மா உணவகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.DMA/1795/2026-M1 நாள்.23.05.2026-ல் அறிவுரையின்படி, அம்மா உணவகத்தில் பழுது பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் பாத்திரங்கள் பழுதானதை புதிதாக மாற்றவும் **பொதுநிதி 2026-27ன்** கீழ் மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.0865/2026/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 117 / 2026</u>**

வெள்ளகோவில் நகராட்சி உப்புப்பாளையம் பகுதி புதிய நகராட்சி அலுவலக வளாகக் கட்டிடத்தில் தரைதளம், முதல் தளத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணியானது **பொதுநிதி 2026-27ன்** கீழ் மேற்கொள்ள ரூ.3.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.0945/2026/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 118 / 2026</u>**

